## இஸ்லாமியக் கலாச்சாரத்தின் சமூகப் பரிமாணங்கள்

இஸ்லாமிய மார்க்கம் தோன்றுவதற்கு முன்பாக மக்கள் இருட்டடிக்கப் பட்ட இருண்ட காலத்தில் வாழ்ந்து வந்தனர். விக்கிரக வழிபாடு பரவியிருந் தது, அல்லாஹ்வின் வணக்கத்தை விட்டுவிட்டு அவர்கள் வணங்கிவந்த பொய்யான கடவுள்களின் எண்ணிக்கை எந்த அளவிற்குச் சென்றடைந்தது என்றால், மனிதர்கள் இதற்கு முன்பாக இவ்வகையில் நினைத்துக்கூட பார்த்திருக்கமுடியாது. தீய குணங்கள், ஒழுக்கக்கேடு, வெட்கக்கேடான செயல்கள், தீயச்செயல்கள் மற்றும் குழப்பங்கள் தலைவிரித்தாடின. குழப்பங்கள் உலகத்தின் அனைத்து மூலை முடுக்குகளிலும் பரவிவிட்டன. இக்காலக் கட்டத்தில்தான், அல்லாஹ் தஆலா உலகெங்கிலும் பரவி யிருந்த இந்த இருளைப்போக்கி அதனை ஒரு முடிவுக்குக்கொண்டுவரும் வகையில் ஒரு பிரகாசத்தை அனுப்பினான். இஸ்லாத்தின் பிரகாசமான சூரியன் உதித்துவிட்டது. நீதியும் நேர்மையும் நிலைநாட்டப்பட்டது, உலகத்தின் மூலைகளிலெல்லாம் சீரான வாழ்க்கை திரும்பி வந்துவிட்டது.

இஸ்லாம் ஒரு முழுமையான சமூக அமைப்பினை நிறுவிவிட்டது, அதற் கான ஆதாரமாக நேர்மையான, முஸ்லிமான (கீழ்ப்படியும் பண்புடைய) தனிநபர்களை உருவாக்கி, நேர்மையான முஸ்லிம் சமுதாயத்தின் கட்டமைப் பினை உருவாக்குவதில் இதனை ஒரு அடிப்படை ஆதாரமாக இருக்க வேண்டும், சமுதாயத்தில் பரஸ்பரசகோரதரத்தையே ஆதாரமாகக்கொண்டி ருக்கவேண்டும் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு சமுதாயம் உருவாக்கப்படுவது இன்றியமையாத ஒன்றாகவே இருந்தது. ஏனெனில், இச்சமுதாயம் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய அழைப்புப் பணியில் இணைந்து அந்த மகத்தான பொறுப்பினை நிறை வேற்றவும் அவர்களுடைய ﷺ மறைவுக்குப்பின்னர், இந்த அழைப்புப் பணி எதிர்கொள்ளும் சவால்களை எதிர்த்துப் பாதுகாத்து அதனை உல கெங்கிலும் கொண்டுசேர்க்கும் பொறுப்பினையும் ஏற்கவேண்டியிருந்தது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் மக்காஹ் முகர்ரமஹ்வின் ஆரம்பக்காலக்கட்டத் தில் நேர்மையான முஸ்லிமான தனிநபர்களை நெறிப்படுத்தி உருவாக்குவ தில் கவனம் செலுத்தினார்கள். ஏனெனில், இது ஒரு இஸ்லாமியச் சமுதா யத்தைவடிவமைப்பதில் அடிப்படைஆதாரமானஒன்றாக அமைந்திருந்தது. இந்த நெறிப்படுத்தி வழிநடத்தும் பணி பல்வேறு வகையானது:

### முதலாவது : அ∴கீதா எனப்படும் அடிப்படைக் கொள்கைகளை சரிசெய்தல்

இஸ்லாம் மக்களை விக்கிரக வழிபாட்டிலிருந்து நீக்கி ஏக இறைவனான அல்லாஹ்வை வணங்கவேண்டும் என்று வலியுறுத்தியது. அல்லாஹ்,

www.uzairfalahi.com

அவனுடைய மலக்குமார்களான வானவர்கள், அவனுடைய வேதங்கள், அவனுடைய தூதர்கள், இறுதித்தீர்ப்பு நாள் மற்றும் நன்மை தீமையா னவை அனைத்தும் அல்லாஹ் விதித்தவையே என்ற அடிப்படை போதனை களை அளித்தது. மக்களை படைப்புகளின் வணக்கம் மற்றும் அவற்றிற்கு அடிமையாவதிலிருந்து விலக்கி, அல்லாஹ்வின் வணக்கத்தின் புறமாகவும், அறிவுத்திறன் குன்றிய நிலையிலிருந்து விடுதலையளித்தும் உள்ளது. அவர் களுடைய உணர்வுகள் மற்றும் ஆற்றல்களை அங்கீகரித்து அவர்களுக்கு மிக்க உயர்வான அந்தஸ்தினையும் அளித்து வழிநடத்திச்செல்கின்றது. இதன் காரணமாக, அல்லாஹ்வின்மீதான நம்பிக்கை (ஈமான்) அவர்களுடைய மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. மக்கள் தங்களுடைய குடும்பங்கள் மற்றும் உறவினர்களைப் பாதுகாத்துக்கொள்வதைவிட தன்னுடைய மார்க் கத்தையும் சீரான கொள்கைளையும் பாதுகாத்துக்கொள்வதில் தங்கள் உயிரையே தியாகம் செய்துள்ளனர். அல்லாஹ்வின் திருப்பபொருத்தத் தைப் பெறவேண்டும் என்பதற்காக மார்க்கத்தின் பாதுகாப்பில் உதவிகளைச் செய்து, அதனைப் பரப்புவதிலும் அனைத்து மக்களிடத்தில்கொண்டு சேர்ப் பதிலும் தங்களுடைய வாழ்க்கைகளையே அர்பணித்தும் உள்ளனர்.

ஹஜ்ரத் ராப்ஃஇ பின் ஃஆமிர் (ர) போன்ற பிரபல நபித்தோழர் பாரசீக நாட்டின் படைத்தலைவர் மற்றும் ஆட்சியாளனான ருஸ்தும் அரசவைக்குள் பிரவேசித்தபோது அங்கிருந்த கவர்ச்சி மற்றும் அழகு அலங்காரங்களினால் சற்றும் உணர்ச்சிவசப்படாமலும் பொருட்படுத்தாமலும் இருந்தார்கள். அவர்களைப்பார்த்து ருஸ்தும் கேட்கிறான், என்ன விஷயத்திற்காக வந்துள் ளீர்கள்? அதற்கு அவர்கள் (ர) கூறினார்கள், அல்லாஹ் மக்களை மற்ற மக்க ளுக்கு அடிமையாக ஆகுவதிலிருந்து நீக்கி அல்லாஹ்வின் அடிமைகளாக வும், அவனுடைய வணக்கத்தின்பால் கொண்டுசேர்க்கவும், இந்த உலகின் நெருக்கடிகளிலிருந்து நீக்கி இவ்வுலக மற்றும் மறு உலகப் பாங்கியங் களின்புறமாகக் கொண்டு செல்வதற்காகவும் எங்களை அனுப்பியுள்ளான்.

**இரண்டாவது: நற்குணங்களை மேம்படுத்திக்கொண்டு திருமறையில் அருளப்பட்ட போதனைகளைப் பின்பற்றுதல்**

அரேபிய சமுதாயங்களில் பெரும்பாலானோர் பாவங்கள் மற்றும் ஒழுக்கக் கேடான தீயச் செயல்களில் மூழ்கியிருந்தனர். இஸ்லாம் தோன்றியபின் அவர்களுக்குக்கற்பொழுக்கம் மற்றும்தூய்மையின் போதனைகளை வழங் கியதன் பலனாக அவர்கள் தங்களுடைய பார்வைகளைத் தாழ்த்தி ஒழுக் கக்கேடான, மானக்கேடான காரியங்கள் மற்றும் பாவச்செயல்களைவிட்டு விலகினர். அவர்கள் அல்லாஹ்வை அஞ்சி இஸ்லாமியப் போதனை களைப் பின்பற்றியதன் காரணமாகவே இந்த மாபெரும் மாற்றம் ஏற்பட் டது. எந்த அளவிற்கு என்றால், ஏதோ வகையில் விபச்சாரம் போன்ற ஒரு

www.uzaifalahi.com

மானக்கேடான செயலைச் செய்துவிட்டாலும் இறைத்தூதர் ﷺ அவர்களிடத்தில் சென்று மறுமை நாளில் அல்லாஹ்வுக்கு முன்பாக இழிவுக்கு ஆளாகிவிடக்கூடாது என்ற காரணத்தினால் இதற்கான தண்டனையை இங்கேயே நிறைவேற்றி வைக்குமாறு கேட்டுக்கொண்டும் உள்ளனர்.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பாக அரேபியர்கள் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் வாளேந்தி சண்டையிட ஆரம்பித்துவிடுவார்கள். ஒருவரையொருவர் ஏதோ ஒரு காரணத்தினாலோ அல்லது எந்தக் காரணமும் இல்லாமலோ கொடுமை இழைத்தும் விடுவார்கள். ஒரு சாதாரண விஷயத்திற்காக அவர்களுக்கிடையே பல ஆண்டுகள் போர் தொடரும். இஸ்லாம் கொடுமை இழைப்பது மற்றும் அத்துமீறல்களை ஹராமானவையாக தடுத்துவிட்டது. இதன் காரணமாக, அமைதியும் பாதுகாப்பும் நிலவியது. மக்கள் கொடுமை இழைக்கும் பழக்கத்தைவிட்டுவிட்டு அன்பு மற்றும் கருணை மனப்பான்மையினைக் கடைபிடிக்க ஆரம்பித்துவிட்டனர்.

**மூன்றாவது: அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருடைய தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளுதல்**

அரேபியர்கள்தங்களுடைய மூதாதையர் வழிவந்த சம்பிரதாயங்களின் அடிப்படையிலான முறையில் தன்னிச்சையாகவே தீர்ப்பளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இஸ்லாம், இந்த அறியாமை காலத்து வழக்கங்களை முடிவுக்குக் கொண்டுவந்தது, அத்துடன், அல்லாஹ் தஆலாவின் கட்டளைகளையும் சட்டங்களையும் நிலைநாட்டியது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا۟ فِىٓ أَنفُسِهِمْ حَرَجًا
مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴿٦٥﴾ (النساء 65)

*பொருள்: இல்லை (முஹம்மதே) உம்முடைய இறைவன்மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுக்கொண்ட பின்னர் நீர் அளிக்கின்ற திர்ப்பு குறித்து தம் உள்ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும் அதற்கு அடிபணியாதவரை அவர்கள் நம்பிக்கைகொண்டவர்களாக ஆகமாட்டார்கள் (அந்நிசா:65)*

**நான்காவது: ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி பதில்கூறவேண்டிய நிலை மற்றும் மார்க்கச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல்**

இஸ்லாம் ஒவ்வொருவரும் தன்னுடைய செயல்களுக்கெல்லாம் பதில்கூறவேண்டிய கட்டாயத்தினைப்பற்றி வலியுறுத்துகின்றது. இதனை இஸ்லாம் பொறுப்பேற்கும் அடிப்படையாகக் கருதுகின்றது. இஸ்லாத்திற்கு முன்

www.uzairfalahi.com

பாக அரேபியர்கள் தங்களுடைய குலத்தைச் சார்ந்தவர்களுக்கு அவர்கள் மற்றவர்கள்மீது கொடுமை புரிந்தாலும் மற்றவர்களால் கொடுமையிழைக் கப்பட்டாலும் எல்லா வகையிலும் உதவியாய் இருந்துவந்தார்கள். இவ் விஷயத்தில் அவர்கள் தங்களைச்சார்ந்த மக்கள் உண்மையின் அடிப்படை யில் நடந்து கொள்கின்றார்களா, அநீதியான முறையில் நடந்துகொள்கின் றார்களா என்பதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இஸ்லாம் மக்களுக்கு அல்லாஹ்வுக்கு முன்பாக ஒவ்வொருவரும் தன்னுடைய செயல்களைப் பற்றி கேள்விகணக்கின் அடிப்படையில் பதில்கூறவேண்டியிருக்கும் என் றும் மக்கள் தங்களுக்குக் காட்டப்பட்ட மார்க்கத்தின் வழியினைப் பின்பற் றுவதில் பற்றுதலுடன் இருக்கவேண்டும் என்ற போதனைகளை அளித்தது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

إِنَّمَا وَلِيُّكُمُ ٱللَّهُ وَرَسُولُهُۥ وَٱلَّذِينَ ءَامَنُواْ ٱلَّذِينَ يُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُونَ ٱلزَّكَوٰةَ وَهُمْ رَٰكِعُونَ ﴿٥٥﴾ وَمَن يَتَوَلَّ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَٱلَّذِينَ ءَامَنُواْ فَإِنَّ حِزْبَ ٱللَّهِ هُمُ ٱلْغَٰلِبُونَ ﴿٥٦﴾ المائد 5 . 56 )

*பொருள்: அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இறைநம்பிக்கையாளரும் தாம் உண்மையிலேயே உங்களுக்கு உற்ற நண்பர்கள், அவர்கள் தொழு கையை நிலைநாட்டுவார்கள் மேலும், ஜகாத்தைக் கொடுப்பார்கள் மேலும், அல்லாஹ்வுக்குப் பணிந்து வாழ்வார்கள். எவர் அல்லாஹ் வையும் அவனுடைய தூதரையும் இறைநம்பிக்கையாளர்களையும் தம் உற்ற நண்பர்களாய் ஆக்கிக்கொள்கின்றார்களோ அவர் தெரிந்துகொள் ளட்டும், அல்லாஹ்வின் குழுவினர்கள்தாம் வெற்றியாளர்கள் (அல் மாயிதா:55,56)*

* * *



www.tamilislam.com